# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 7261/ 2011 / எம்சி. 8 நாள் : 30 .08.2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 02.09.2011 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - செப்டம்பர் 2011

## (நிகழ்ச்சி நிரல்)

| பொருளடக்கம் | | ப.எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ. எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1 | நகரமைப்புப் பிரிவு - எல்லை விரிவாக்கம் - 100 கோட்டங்கள் - 4 வார்டு குழுக்கள் பிரித்தல் - வரையறை விபரம் - உத்தேசிக்கப்பட்ட கருத்துரு – மாமன்றம் கருத்துக்கள் பதிவு செய்தல் - தொடர்பாக | 2 |

நன்றியுரை

**அ)** **திருக்குறள்**

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

(குறள் 712)

**விளக்கம்**

சொற்களின் வழிமுறையறிந்த நல்லறிவாளர்கள் அவையின் நேரத்தையும் நிலைமையையும் உணர்ந்து உரையாற்ற வேண்டும்.

திருவள்ளுவர்

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

கோயம்புத்தூர் மாநகராட்சி **1981**–ம் ஆண்டு மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு **105.6** சதுர கிலோ மீட்டர் பரப்பளவு மற்றும் **72** வார்டுகளுடன் செயல்பட்டு வருகின்றது. இதனைத் தொடர்ந்து அரசாணை எண் **49**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **22.02.2011** மற்றும் அரசாணை எண் **72**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **12.05.2011**ல் மாநகராட்சியைச் சுற்றியுள்ள **11** உள்ளாட்சி அமைப்புகளை கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைத்து அரசு ஆணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சியின் கோட்டங்களின் எண்ணிக்கையினை **72**–லிருந்து **100** ஆக மாற்றி அமைத்து கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் **1981**–ல் உரிய சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அரசு அறிவிக்கை எண்.**92**, நாள் **04.03.2011**–ல் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து சிறப்பு அலுவலர் நியமிக்க அரசாணை எண். **91**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். **28.06.2011** வாயிலாக ஆணை பிறப்பித்தது. அதன்படி விரிவாக்கப்பட்ட மாநகராட்சிக்கு உத்தேசிக்கப்பட்ட **100** கோட்டங்கள் கொண்ட எல்லைகள் வரையறுப்பது தொடர்பாக பரப்பளவு, மக்கள் தொகை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை ஆராய்ந்து கோட்டங்கள் பிரித்து பரிந்துரை செய்யும் பணிக்கென சிறப்பு பணி அலுவலர் நியமிக்கப்பட்டார். மேற்படி அலுவலரின் பரிந்துரை அரசுக்கு அனுப்பப்பட்டதில், அரசு மேற்படி செயற்குறிப்பினை கவனமுடன் பரிசீலித்து விரிவாக்கப்பட்ட மாநகராட்சியின் **100** கோட்டங்களுக்கான எல்லை அறிவிக்கையாணை வெளியிட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் **243–S**–ன்படி **3** இலட்சம் மக்கள் தொகைக்கு மேற்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு குழுக்கள் அமைக்க வழிவகை உள்ளது.

விரிவாக்கம் செய்யப்படும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கோட்டங்கள் **100** எண்ணிக்கையாகவும், கோட்டங்களின் எல்லைகள் இறுதி செய்யப்பட்டுள்ளதாலும், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு **5**–ஏ–ன்படியும், தமிழ்நாடு சட்டம் **25/1981** மற்றும் பிரிவு **8**–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **100** கோட்டங்களை நான்கு வார்டு குழுக்களாக அமைக்க கீழ்கண்ட அட்டவணையின்படி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **வார்டு குழுக்கள் பெயர்** | **ஒவ்வொரு வார்டு குழுவிற்கும் உள்ள கோட்டங்கள்** | **மொத்தக் கோட்டங்கள்** |
|---|---|---|---|
| 1 | மேற்கு | 1 – 25 | 25 |
| 2 | வடக்கு | 26 – 50 | 25 |
| 3 | கிழக்கு | 51 – 75 | 25 |
| 4 | தெற்கு | 76 – 100 | 25 |

உத்தேசிக்கப்பட்டுள்ள வார்டு குழு வரையறைகளின் விவரங்களை மாமன்றத்தில் வைத்து, கருத்துக்கள் ஏதுமிருப்பின் **05.09.2011**–ம் தேதிக்குள் நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் (மற்றும்) சிறப்புப் பணி அலுவலர் (கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கம்), நகராட்சி நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–**5** அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறப்படும் கருத்துக்கள் மீது அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட காலவரையறைக்குள் கருத்துக்கள் ஏதும் பெறப்படவில்லையெனில் இது குறித்து மாமன்றம் தெரிவிக்க வேண்டிய கருத்துக்கள் ஏதுமில்லையெனக் கருதி மேல் நடவடிக்கை தொடரப்படும் என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு வார்டுக்குழுக்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்துருவின்மீது மாமன்றத்தின் கருத்துக்களைப் பதிவு செய்யலாம்.

**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் கருத்துக்களை பதிவு செய்யலாம்.

ந.க.எண்.**11533/2007**/எம்.எச்.**5**

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி